மலர் : 11 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 11
தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
हन्ड्रेड विल्लेज मिनिस्ट्री
ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

## செப்டம்பர் 2011

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ.

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர




**TVGM - 2011 செப்டம்பர்**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

**நான் உன்னை**
**ஆசீர்வதிக்கவே**
**ஆசீர்வதித்து,**
**... பெருகவே**
**பெருகப்பண்ணுவேன்.**
**ஆதியாகமம் 22 : 17.**

**லூாக்கா** 7 : 4 , 5 யூதருடைய மூப்பர்கள் **இயேசு**வினிடத்தில் வந்து, அவரைக் கருத்தாய் வேண்டிக்கொண்டு :
**நீர் இந்தத் தயவுசெய்கிறதற்கு அவன் பாத்திரனாயிருக்கிறான்.**
நூற்றுக்கதிபதி நம்முடைய ஜனத்தை நேசிக்கிறான்,
**நமக்கு ஒரு ஜெப ஆலயத்தையும் கட்டினான்**
என்றார்கள்.



நீங்களும் ***கர்த்தருடைய தயவை*** பெற்றுக் கொள்ள பாத்திரராயிருக்கிறீர்களா ?

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்



**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
மேனேஜிங் டிரஸ்டி
**Cell : 94449 80445**



P.T. **கிறிஸ்டோபர்**
TVGM ஸ்தாபகர்
**Cell : 94435 44628**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு,

தேவசமாதானம் உண்டாவதாக!

கர்த்தருடைய கிருபையினால் 5 கிராம ஜெபவீடுகளின் குறை வேலைகளை முடிக்கவும்., பிரதிஷ்டை செய்யவும் கர்த்தர் கிருபை செய்தார்.

பாஸ்டர் நோயல் ஜாய் ( நீர்கொழும்பு ) மூலமாக இலங்கையில் ஊழியம் செய்கிற கொரியா மிஷனெரிகள் Rev. Daniel Kim , Rev. Suny Kim ஆகியோர் TVGM-க்கு வந்து, கிராம ஊழியர்களுக்கு தலைமைத்துவத்தைக் குறித்து பயிற்சி அளித்தார்கள்.

பெல்ஜியத்திலிருந்து சகோதரி ஷீலா அவர்கள் ஒரு குழுவினரை TVGM-க்கு அழைத்து வந்தார்கள். அறிமுகம் செய்து வைத்த சகோ. பென்னி ( பால் பிரிண்டர்ஸ் ) மற்றும் சகோ. சதீஷ் அவர்களுக்கு நன்றி.

தயவுசெய்து உங்கள் பிறந்தநாள், திருமணநாள் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளை ஒரு மாதத்திற்கு முன்கூட்டியே தெளிவாக எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்பதை நாங்கள் பெரும் பாக்கியமாக கருதுகிறோம்.

உங்கள் ஈமெயில் , போன், முழு விலாசம் ஆகியவற்றை காணிக்கை அனுப்பும்போதும், தபால் எழுதும்போதும் தெரிவிக்க மறவாதீர்கள்.

TVGMசிறுவர் இல்லப் பிள்ளைகளுக்காகவும், 100-கிராம ஊழியத்திற்காகவும், TASOL தரிசனத்திற்காகவும் ஜெபித்து வரும் ஒவ்வொருவரையும் **கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!**

கிறிஸ்துவின் பணியில் ,
**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
& P. T. **கிறிஸ்டோபர்**

09.08.2011

ஆதியாகமம் 22 : 17

# நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, ... பெருகவே பெருகப் பண்ணுவேன்.

வாக்குத்தத்த செய்தி : **சகோ. P.T. கிறிஸ்டோபர்**

**கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!**

**ஆதி . 1 : 27, 28** " தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்...ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.

பின்பு தேவன் அவர்களை நோக்கி : **நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்**" என ஆசீர்வதித்தார்.

மனுஷருக்கு தேவன் கொடுத்த முதல் ஆசீர்வாதம் : **நீங்கள் பலுகிப் பெருகுங்கள்.**

**ஆதி. 9 : 1** "பின்பு தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் ஆசீர்வதித்து: **நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்**"

**ஆதி. 26: 24** கர்த்தர் **ஈசாக்குக்கு தரிசனமாகி,** நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமுடைய தேவன். பயப்படாதே நான் உன்னோடேகூட இருந்து,. என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினித்தம் உன்னை ஆசீர்வதித்து, **உன் சந்ததியை பெருகப்பண்ணுவேன்.**

**ஆதி . 35 : 11** தேவன் யாக்கோபை நோக்கி, நான் சர்வ வல்லமையுள்ள தேவன் **நீ பலுகிப் பெருகுவாயாக.**

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஒவ்வொருவரையும் தேவன் பலுகி பெருகுவாயாக என ஆசீர்வதிக்கிறார். உங்களையும் **பலுகிப் பெருகப் பண்ணுவாராக.** ஆமென்.

**ஆதி . 13 : 16** "கர்த்தர் ஆபிராமை நோக்கி , உன் சந்ததியைப் பூமியின் தூளைப் போலப் **பெருகப் பண்ணுவேன்**"

ஆதி. 17 :2 "நான் உனக்கும் எனக்கும் நடுவாக உன் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் திரளாய்ப் **பெருகப் பண்ணுவேன்**" என்றார்.

ஆனால் **ஆதி. 22 : 15** ல் கர்த்தருடைய தூதனானவர் இரண்டாந்தரம் வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டு : **நீ உன் புத்திரன்** என்றும், **உன் ஏகசுதன்** என்றும் பாராமல் **அவனை ஒப்புக் கொடுத்து** இந்தக் காரியத்தைச் செய்தபடியால் ; நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, . . . **பெருகவே பெருகப்பண்ணுவேன்** என்றார் ( ஆதி. 22 : 16 , 17 ).

எவ்வளவு நிறைவான ஆசீர்வாதம்.

ஆம், என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே! இந்த மாதத்தில் கர்த்தர் "உங்களை **ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து** பெருகவேப் பெருகப் **பண்ணுவார்**" ஆமென்.

**"பெருகவே பெருகப்பண்ணுவேன்"** என்ற இந்த உன்னத வாக்குத்தத்தத்தைப் பெற ஆபிரகாமிடத்தில் காணப்பட்ட குணாதிசயம் :

**"ஒப்புக்கொடுத்தல்"** ஆகும். புத்திரன் என்றும், ஏகசுதன் என்றும் பாராமல் பலியிட ஒப்புக் கொடுத்தார்.

"**பெருகவே பெருகப்பண்ணுவேன்**" என்ற ஆசீர்வாதத்தைப் பெற, பெற்றோர்களாகிய உங்களுக்குத் தேவை : **"ஒப்புக்கொடுத்தல்"** ஆகும். பிள்ளைகளாகிய உங்களுக்குத் தேவை : **"ஒப்புக்கொடுத்தல்"** ஆகும். விசுவாசிகளாகிய உங்களுக்குத் தேவை : **"ஒப்புக்கொடுத்தல்"** ஆகும். போதகர்களாகிய உங்களுக்குத் தேவை : **"ஒப்புக்கொடுத்தல்"** ஆகும். தலைவராகிய உங்களுக்குத் தேவை : **"ஒப்புக்கொடுத்தல்"** ஆகும்.

உங்கள் **பிரதானமான காரியத்தை**, "**தேவனுடைய மகிமைக்கு தேவை**" என கண்டால், **நீங்கள் ஒப்புக் கொடுக்க ஆயத்தமா?**

ஆயத்தமானால், கர்த்தருடைய வார்த்தைக் கூறுகிறது :

"**பெருகவே பெருகப்பண்ணுவேன்**"

பக்தன் பாடுகிறார் :

***ஒப்புக் கொடுத்தீர் ஐயா***
***உம்மையே எனக்காக***
***உலகின் இரட்சகரே***
***உன்னத பலியாக***

முதலாவதாக, கிறிஸ்துவானவர் தம்மை தேவனுக்கு ஒப்புக் கொடுத்தார்.

**எபேசியர் 5 : 2** "கிறிஸ்து நமக்காக தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனை யான காணிக்கையாகவும் பலியாகவும் **ஒப்புக்கொடுத்து** நம்மில் அன்பு கூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள். "

***நீங்களும் ஒப்புக் கொடுங்கள்.***

**1 பேதுரு 4 : 19** "ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுப விக்கிறவர்கள் நன்மை செய்கிறவர் களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக் கொடுக்கப்படவர்கள்"

***பக்தன் பாடுகிறார் :***

**ஆவியோடாத்மா சரீரம் அன்பரே**
**உமக்கென்றும் தந்தேன்**
**ஆலயமாக்கியே இப்போ**
**ஆசீர்வதித்தருளும்**
**கல்வாரியின் அன்பினையே**
**கண்டு விரைந்தோடி வந்தேன்**
**கழுவும் உம் திரு இரத்தத்தாலே**
**கறை நீங்க இருதயத்தை**

பாடுங்கள், பாடிக் கொண்டேயிருங்கள்.

வாலிப தங்கையே, தம்பியே, தம்பதியரே, இந்த மாதத்தில்

முதலாவது **உன்னை கர்த்தருக்கு ஒப்புக் கொடுப்பாயா?**

இரண்டாவது **உனக்கு உண்டானவைகளை கர்த்தருக்கு ஒப்புக் கொடுப்பாயா?**

கடைசியாக **உன்னையே கர்த்தருடைய ஊழியத்திற்கு ஒப்புக் கொடுப்பாயா?**

***பக்தன் பாடுகிறார் :***

***உலகோர் உன்னை பகைத்தாலும்***
***உண்மையாய் அன்பு கூறுவாயா?***
***உற்றார் உன்னை பகைத்தாலும்***
***ஊழியம் செய்ய வருவாயா?***
***உலக மேன்மை அற்பமென்றும்***
***உலக ஆஸ்தி குப்பை என்றும்***
***உள்ளத்தினின்று கூறுவாயா?***
***ஊழியம் செய்ய வருவாயா?***
***ஊழியம் செய்ய வருவாயா?***

எனக்கன்பான கர்த்தருடைய பிள்ளையே! இந்த மாதம் நீங்கள் கர்த்தருக்கு அர்ப்பணிக்கும் மாதம்.

**இயேசு கேட்கிறார் :**

**உனக்காக நான் மரித்தேனே?**
**எனக்காக நீ என்ன செய்தாய்?**

மீண்டும் இயேசு கேட்கிறார் :

**உனக்காக நான் மரித்தேனே?**
**எனக்காக நீ என்ன செய்தாய்?**

உங்களையும் உங்களுக்கு உண்டானவைகளையும் கர்த்தருக்கு **ஒப்புக் கொடுக்கும்**போது, தேவன் **உங்களுக்கென்று கொடுக்கும் வாக்குத்தத்தம் :**

**நான் உன்னை**

**ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, ..**

**பெருகவே பெருகப்பண்ணுவேன்.**

**நமக்குள் இருக்க வேண்டிய சிந்தை**

**யோவான் 3 : 30** இயேசு பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்.

**2 கொரி. 9 : 6** சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்.

தங்களை அர்ப்பணித்து, தேவனுடைய இராஜ்யத்தை விஸ்தரிக்க சபைகளை ஸ்தாபிக்க யாரெல்லாம் பெருக விதைக்கிறார்களோ, அவர்களெல்லாம் பெருக அறுப்பார்கள். அத்துடன் பெருகவே பெருகுவார்கள்.

ஆதி அப்போஸ்தலர்களுக்குள் மேற்கண்ட இரண்டு சிந்தனைகள் இருந்தது. ஆதலால் பின்வரும் காரியங்கள் நடைபெற்றது.

**அப்போஸ்தலர் 6 : 7** "தேவவசனம் விருத்தியடைந்தது ; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று ."

**அப்போஸ்தலர் 16 : 5** "அதினாலே சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு, நாளுக்குநாள் பெருகின"

**அப்போஸ்தலர் 9 : 31** "சபைகள் சமாதானம் பெற்று, பக்தி விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின"

என் அன்பு போதகர்களே, மேற்கண்ட 3 ஆசீர்வாதங்களையும் இந்த மாதத்தில் தங்கள் சபையில் காண கர்த்தர் கிருபை செய்வாராக.

**தேவன் எவைகளை**

**பெருகப் பண்ணுகிறார் ?**

**1. பெலனையும், சத்துவத்தை**

**பெருகப் பண்ணுகிறார்**

ஏசாயா 40 : 29 "சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார்."

**2. சகலவித கிருபையை**

**பெருகப் பண்ணுகிறார்**

2கொரி. 9 : 8 "மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரண முடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிற வர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் **சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்.**"

**நாம் எவைகளில் பெருக வேண்டும் ?**

**1. தர்ம காரியத்தில்**

**பெருக வேண்டும்**

**2 கொரி. 8 : 7** "அல்லாமலும், விசுவாசத்திலும், போதிப்பிலும், அறிவிலும், எல்லாவித ஜாக்கிரதையிலும், எங்கள்மேலுள்ள உங்கள் அன்பிலும், மற்றெல்லாக் காரியங்களிலும் நீங்கள் பெருகியிருக்கிறது போல, இந்தத் **தர்மகாரியத்திலும் பெருக வேண்டும்.**"

**2. அன்பில் பெருக வேண்டும்**

**1 தெச. 3 : 12** "நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கும் அன்புக்கொப்பாய், நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் **அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும்** நிலைத்தோங்கவும் செய்வாராக."

**3. கர்த்தருடைய கிரியையில் பெருக வேண்டும்.**

**1 கொரி. 15 : 58** "கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிற வர்களாயும் இருப்பீர்களாக."

**4. விசுவாசத்தில் பெருக வேண்டும்**

**கொலோசெயர் 2 : 7** நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக.

**5. எல்லா உணர்வுகளிலும் பெருக வேண்டும்**

**பிலிப்பியர் 1 : 9** "உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகுவதாக".

**பவுல் கூறுகிறார் : 2 கொரி. 1 : 5** கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறது போல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது.

**பிலிப்பியர் 4 : 7** "உபகாரத்தை நான் நாடாமல், உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே நாடுகிறேன்."

இதை வாசிக்கிற அன்பு ஊழியரே விசுவாசிகளே "உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியாக கர்த்தர் கிருபை புரிவாராக."

பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள் :

**தேவன் என்னை, என் குடும்பத்தை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, பெருகவே பெருகப்பண்ணுவார். எங்கள் சபையை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, பெருகவே பெருகப்பண்ணுவார்.**

மீண்டும் மீண்டுமாக அறிக்கை செய்யுங்கள்.

**உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.**

**தேவனுக்கே மகிமை !**

# நன்றி !



TVGM அறிமுகப் பணியாளர்
**சகோ. ஆரோக்கியம்**
அவர்களுக்கு TVS 50
வாங்கிக் கொடுத்த
**திரு.இரத்தினம் ஆசிரியர் குடும்பத்தினருக்காகவும்,**
அவர்களுடைய அன்பின்
வேண்டுகோளுக்கு இணங்க
நன்கொடை அளித்த
ஒவ்வொருவருக்காகவும்,
**திரு. ஆறுமுகம் பிள்ளை ( ஏலீம் )**
அவர்களுக்கும் நன்றி.

**100 கிராம ஊழியம் பத்திரிகை வாசகர்களே !**

1. 2011 ஆம் ஆண்டிற்கு **சந்தா** காணிக்கை அனுப்பி விட்டீர்களா ?
2. உங்கள் ஈமெயில் , மொபைல், வீட்டு தொலைபேசி எண் யாவையும் தவறாமல் மணியார்டர் கூப்பனிலும், தபாலிலும் ஈமெயில் மூலம் அனுப்பி வையுங்கள்.
3. உங்கள் பிறந்த நாள், திருமண நாள் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளை எங்களோடு பகிர்ந்து கொள்ள மறவாதீர்கள்.

**தலைமை அலுவலக முகவரி :**
பக்கம் 16 ( கடைசி உள்பக்கம் )

# கன்னியாகுமரி - முஞ்சிறை யூனியன்
# 100-கிராம ஊழிய அறிக்கை

**சகோ. பன்னீர் செல்வம்**

ஊழியம் நடைபெற்ற தேதி : **25. 07. 2011 முதல் 29. 07. 2011 வரை**

முதல்நாள், கடைசிநாள் கூடுமிடம், உணவுபொறுப்பெடுத்து உதவியவர் :

**பாஸ்டர் D. வில்சன், ஏ.ஜி. சர்ச், கிராத்தூர்.**

| | |
|---|---|
| முதல் நாள் **தேவசெய்தி** கொடுத்தவர் | : **பாஸ்டர் D. வில்சன்** |
| ஊழியம் செய்த **கிராம ஊழியர்கள்** | : 56 |
| பிரிக்கப்பட்ட **குழுக்களின்** எண்ணிக்கை | : 12 |
| வழங்கப்பட்ட **யோவான் சுவிசேஷங்கள்** | : 12,945 |
| **இயேசுவே இரட்சகர்** கைப்பிரதிகள் | : 10,000 |
| மற்ற கைப்பிரதிகள் | : 5000 |
| '**நம் மத்தியில் வாழ்ந்த அவர்**' புத்தகங்கள் | : 400 |
| **சிலுவைக்கொடிகள்** | :10,000 |
| புறமதநண்பர்களின் **விலாசங்கள்** | : 137 |

**சகோ. P.T. கிறிஸ்டோபர்** அவர்கள் முதல் நாள் ஜெபத்தில் கலந்து கொண்டு ஊழியர்களை உற்சாகப்படுத்தி ஜெபித்தார்கள். கடைசிநாளில் கிராம ஊழியர்கள் கூடி கிராமங்களில் கர்த்தர் எப்படியாக நடத்தினார் என்பதை சாட்சியாக கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள். ஊழியர்களுக்கான பிரயாணப்படி, இனிப்பு, பார்சல் செலவுகளை நாகர்கோவில் TVGM. அறிமுகப்பணி அலுவலக பொறுப்பாளர் **சகோதரி ஷோபனா இவாஞ்சலின்** மற்றும் உடன் ஊழியர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டதோடு, இந்த ஊழியம் நடைபெற அதிகமாக ஜெபித்து, பிரயாசப்பட்டார்கள். **கர்த்தர் தாமே இவர்களை ஆசீர்வதிப்பாராக!**




56 கிராம ஊழியர்கள்

கிளை அலுவலக சகோதரிகள் பாடல்

ஜெப வேளை

# கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1 - சகோதரிகள் : லூயிஸ், அன்பு ராஜாத்தி, ரூபி ஜெயந்தி, கிருபா பழனியம்மாள்.**

நாங்கள் சென்ற கிராமத்தில் கிட்னி நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு இயேசுவின் குணமாக்கும் வல்லமையை எடுத்து கூறி ஜெபித்தோம். **சூழால்** கிராமத்தில் தொழுநோயாளர் ஒருவருக்கு எண்ணெய்ப் பூசி ஜெபித்தோம். உடனே ஊரல் குறைந்தது என்று கூறினார். முழுமையாக சுகம் பெற இயேசுவையே பற்றிக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு வந்தோம். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2 - சகோதரிகள் : கஸ்தூரி, மேரி மீனா,மரியாள், சவுந்திரமேரி**

**பீலிக்குளம்** கிராமத்தில் தங்கி யிருந்து சுற்றியுள்ள ஊர்களில் யோவான் சுவிசேஷம் கொடுத்தோம். எல்லா இடங்களிலும் கிறிஸ்தவர்களை எதிர்க்கிற கட்சி கொடிகள் பறந்தன. ஆனால் அவர்களில் ஒருவரும் வந்து எதிர் பேசவில்லை. வரவேற்கவும் இல்லை. அநேகர் தங்களுடைய வியாதி மற்றும் பிரச்சனைகளைக் கூறி ஜெபிக்கக் கேட்டார்கள். ஜெபித்தோம். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 825 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3 - சகோதரிகள் : மணியம்மா, தேவகிருபை, சலோமி, சந்திரலீலா, லூர்துமேரி.**

**குளப்புரம்** ஊராட்சியுள்ள 10 கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து ஊழியம் செய்தோம். ஒரு வீட்டில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்த போது, அவர்கள் காசு வாங்கத் தானே வந்திருக்கிறீர்கள் என்றார்கள். நாங்கள் காசு வாங்க வர வில்லை, உங்களுக்கு ஆசீர்வாதம் உண்டாகும் வார்த்தை களைக் கூற வந்தோம் என்று கூறினோம். போகும் பாதையில் பணியில் இருந்த போலீஸ்காரர்களுக்கு கைப் பிரதிகள் கொடுத்து சுவிசேஷத்தைக் கூறினோம். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 830 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4 - சகோதரர்கள் : பால்ராஜ், சூசைமாணிக்கம், ஏசுராஜா, ஸ்டேன்லி.**

**கானக்குடிவிளை, ஆக்கவிளை, குளப்புரம், பிராக்கோடு** கிராமங்களில் சிலர் எங்களை எதற்காக வந்தீர்கள் என்று கேட்டார்கள். இயேசுவின் நற்செய்தியைக் கூற வந்தோம் என்று சில வார்த்தைகளை விளக்கமாக சொல்லவும் அவர்கள் அமைதியாக போய் விட்டார்கள். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5 - சகோதரிகள் : ஜோதிமணி, அபியேல் அந்தோணிம்மாள், கிளமெண்ட்ஸ்மேரி, தெபோராள்.**

நாங்கள் அநேக வீடுகளில் போய் ஜெபித்தோம். ஒரு வீட்டில் அம்மாவும், மகளும் கடன்பிரச்சனை தாங்க முடியாமல் தற்கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு இருந்தார்கள். அநேக ஆறுதலான வார்த்தைகளை சொல்லி இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபித்து வந்தோம். மொத்தம் 1100 யோவான் சுவிசேஷங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6 - சகோதரிகள் : ஷீலா, அந்தோணிமேரி, ரோணிக்கம், எஸ்தர் கனகாம்புஜம், லில்லி.**

நாங்கள் சென்ற கிராமங்களில் எந்த எதிர்ப்புகளும் இல்லை. மொத்தம் 1600 யோவான் சுவிசேஷங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7 - சகோதரர்கள் : இஸ்ரவேல், ஆரோன், ஜெபமலைநாதன், பீட்டர், செல்வராஜ்.**

**கிராத்துார்** மற்றும் அதைச் சுற்றியுள்ள 10 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தியைக் கூறினோம். தன் வியாபாரத்தினிமித்தம் மனவேதனை யோடு காணப்பட்ட வாலிபர் ஒருவருக்கு இயேசுவின் நாமத்தில் அவருடைய மனவேதனைகள் மாறட்டும் என்று ஒருமனப்பட்டு ஜெபித்தோம். உடனே இயேசு அந்த வாலிபருக்கு இருந்த கட்டுகளை நீக்கி ஒரு புதிய சந்தோஷத்தைக் கொடுத்தார். அவர் மகிழ்ச்சியோடு டீ , பழம் கொடுத்து எங்களை உபசரித்தார். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 820 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8 - சகோதரிகள் : எஸ்தர், அன்னக்கிளி, பிச்சையம்மாள், எஸ்தர் எபிநேசர், செல்லக்கனி.**

**வாளவிளை** பகுதியில் ஊழியம் செய்தபோது, ஒரு வாலிபன் எங்களிடம் வந்து நீங்கள் யார் ? யார் உங்களை அனுப்பியது ? என்று மிரட்டினார். இவரிடம் தகுந்த பதில் சொல்லிவிட்டு வேறு இடத்திற்கு கடந்து போனோம். மொத்தம் 1125 யோவான் சுவிசேஷங்கள், 830 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9 - சகோதரர்கள் : மார்கு மாரியப்பன், மகாராஜன், செல்வராஜ், ஆபிரகாம்.**

**சிலுவைபுரம், விளாகம், சித்ரவிளாகம், பூவன்விளை, கச்சேரிநடை** ஆகிய கிராமங்களில் ஊழியம் செய்தோம். கால் நடக்கமுடியா மலிருந்த ஒரு மனிதன் எங்களை யார் ? எதற்காக இங்கு வந்தீர்கள் ? என பல கேள்விகள் கேட்டான். நாங்கள் இயேசுவைப் பற்றிய புத்தகங்கள் கொடுக்க வந்தோம் என்று சொன்னோம். அதற்கு அவன் இல்லை, நீங்கள் தங்க செயின் திருட வந்திருக்கிறீர்கள் என்று திட்டினான். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 820 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10 - சகோதரிகள் : கனி, ஜெயந்தி, ரெபேக்காள், அன்னாள்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது சிலர் மறுத்தார்கள். பலருக்காக ஜெபித்தோம். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 830 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 11 - சகோதரிகள் : மரியம்மாள், எஸ்தர் பேபி, தேவபாக்கியம், பாக்கியம்.**

**தூத்தூர், சின்னத்துறை** ஆகிய கிராமங்களில் அநேக ஆர்.சி. கிறிஸ்தவர்கள் தங்கள் குறைகளை சொல்லி ஜெபிக்கக் கேட்டார்கள். குழந்தை இல்லாத அநேகர் குழந்தை பாக்கியத்திற்காக ஜெபிக்க க் கேட்டனர். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 12 - சகோதரர்கள் : யோசுவா, ஸ்டீபன்ராஜ், ஜீவானந்தம், ஜோசப் முரளிதரன், பாபு சாலமோன்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் சில வாலிபர்கள் எங்களை எதிர்த்தார்கள். நாங்கள் வாக்குவாதம் செய்யாமல் வந்து விட்டோம். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 895 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

## ஜெபியுங்கள் !

ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகத்தின் விலை **ரூ.1 .**
வருடத்திற்கு குறைந்தபட்சம் ரூ.1,20,000 தேவைப்படுகிறது.
ஜெபித்து தாங்க முன்வாருங்கள்.

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ.** 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

## கடலூர் மாவட்டம் - பரங்கிபேட்டை யூனியன்

## 100 - கிராம ஊழியம்"

**நோக்கம்:** 2011 **செப்டம்பர்** 12 திங்கள் காலை 9 மணி முதல் **செப்டம்பர்** 16 வெள்ளி இரவு 10 மணி முடிய **பரங்கிபேட்டை யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம்** :2011 **செப்டம்பர்** 12 திங்கள் காலை 9 - 1 மணி

**கடைசி நாள் ஜெபம்** : 2011 **செப்டம்பர்** 16 வெள்ளி இரவு 7 - 10 மணி

**( 2011 செப்டம்பர் 12 - 16 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

### உபவாச ஜெபம் நடைபெறும் இடம்

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்,** TVGM
C/o. **நல்ல மேய்ப்பன் ஜெபவீடு,**
**தண்டவராயன் சோழகன்பேட்டை(** T.S. **பேட்டை)ரோடு**
**நடராஜபுரம் - 608 002.**
**சிதம்பரம் தாலுகா, கடலூர் மாவட்டம்.**
**செல்:** 91501 26744, 93602 05280

உதவி செய்ய முன் வந்த Pr.காபிரியேல்,Pr.மைக்கேல், Pr.சைமன் – நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி** : தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு** : 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும்** : சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்,
**100 - கிராமம்,** திருச்சி - 620 102. Ph : 0 - 431 - 2607241 , 94449 39445

# கன்னியாகுமரி மாவட்ட
# TVGM அறிமுகப்பணி அலுவலகம்
# 2011 ஜுலை மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் ஜுலை மாத ஊழியங்கள் மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றன. கல்லுக்கூட்டம் – **ஏல்பெத்தேல் சபை**யில் அறிமுகப் பணி செய்ய கர்த்தர் ஒரு வாய்ப்பினை தந்தார். **பாஸ்டர் ஐசக்ராஜ்** அவர்களும், அவரது அன்புத் தாயாரும், உடன்பிறப்புகள் மற்றும் சபையார் யாவரும் மிகவும் அன்போடு ஏற்று உபசரித்து ஊழியத்தில் மிகுந்த ஒத்துழைப்பைக் கொடுத்தார்கள். கர்த்தர் தாமே அவர்கள் ஊழியங்களையும், குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக.

**தோவாளைப் புதூர்** பகுதியில் 6 சகோதரிகளாக சென்று 2 நாட்களாகவும், **பட்டகசாலியன்விளை** பகுதியிலும் புறமத நண்பர்களின் இல்லங்களை சந்தித்து சுவிசேஷ ஊழியம் செய்யவும், பின்தொடர் பணிக்கான விலாசங்களைப் பெற்றுக் கொள்ளவும் கர்த்தர் கிருபை செய்தார்.

ஜுலை 25 முதல் 29 முடிய **முஞ்சிறை யூனியன் 100–கிராம ஊழியமும்** தடையின்றி நடைபெற கர்த்தர் உதவி செய்தார். **56 தன்னார்வத் தொண்டர்கள் வந்து 110 கிராமங்களில் யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து சுவிசேஷ ஊழியம் செய்தார்கள்.** தேவைகளை கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேவபிள்ளைகள் மூலமாகவே கர்த்தர் பூர்த்தி செய்து கொடுத்தார். அநுகூலமான காலநிலையைக் கொடுத்தார். எந்தவொரு தீமையும் நேரிடாமல் பாதுகாத்துக் கொண்டார்.

**Rev. D. வில்சன்** ( கிராத்தூர் – ஏ.ஜி. சபை ) அவர்கள் தனது சபையில் இடம் அளித்து ஊழியத்தில் பேருதவியாக இருந்தார்கள். அவர்களுக்கு இயேசுவின் நாமத்தில் நன்றி கூறுகிறோம். கர்த்தர் தாமே அவர்களையும், உடன் ஊழியர்களையும், சபையையும் அபரிமிதமாக ஆசீர்வதிப்பாராக.

**நாம் நினைப்பதற்கும் வேண்டிக்கொள்வதற்கும் மிகவும் அதிகமாய் கிரியைச் செய்கிற நம் தேவாதி தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001
தொலைபேசி : 04652 - 277251

கிறிஸ்துவின் பணியில்,
N. **ஷோபனா இவான்சலின்.**
செல்: **98658 26424**

**H. Q : TVGM 0431 - 2607241, 94449 80445, 94435 44628**

## 2011 செப்டம்பர் மாத இயேசுவை விரும்புவோர் முகாம்

மாவட்டம் : ஈரோடு
யூனியன் : கோபிசெட்டிப்பாளையம்
நாள் : 24.09.2011
நேரம் : காலை 9 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர் A. பெரிய நாயகம்**
I.P.A. **ஜெபவீடு, நாகர்பாளையம் ரோடு,**
( BSNL **ஸ்டாப் குவார்ட்டர்ஸ் அருகில்** )
**கோபி செட்டிபாளையம் - 638 452**
**ஈரோடு மாவட்டம் .**

புதுக்கோட்டை – **சகோ. சார்லஸ் / தமிழ்செல்வி** வீடு பிரதிஷ்டையில்
**சகோ. பி.டி.கிறிஸ்டோபர்** தேவசெய்தியளித்தார்கள்.





## TVGM ஏலீம் சிறுவர் இல்லம் - சோமரசம்பேட்டை
## நேரடியாக பார்வையிட்டு இனிப்பு அல்லது உணவு வழங்கியவர்கள்



U.K. -சகோதரி **கிருஷ்ணவேனியின்**
மகன் பிறந்த நாள் (தாத்தா பாட்டியுடன்)



**சகோ. ஆண்ட்ரு ஜெயராஜ்** அவர்கள்
தகப்பனார் பிறந்தநாள் – திருச்சி



**அஜித் பிறந்த நாள்**
கோபால் ஸ்டோர் – சோமரசம்பேட்டை



**Rev. Daniel Kim, Rev. Suny Kim**
**மாம்பழம்** வழங்கினார்கள்

**குறிப்பு :**நேரடியாக வர முடியாவிட்டாலும் காணிக்கைகளை அனுப்பி சிறுபிள்ளைகளுக்கு இனிப்புகள் மற்றும் உணவுகள் வழங்குவதற்கு முன்வந்த ஒவ்வொருவருக்கும் எங்கள் அன்பின் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**கர்த்தர் தாமே அதற்கேற்ற பலனைக் கட்டளையிடுவாராக! ஆமென்.**

## SRI LANKA VILLAGE GOSPEL MISSION (SLVGM)
124 / 3, Nursing Home Road, Hatton , Sri Lanka. 0094512222489
By ... *Rev. John Isaiah,* Secretary - SLVGM Sep.2011



"***முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களா யிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்*** ;" 1பேதுரு 2 : 10

**அன்பான சகோதர, சகோதரிகளே!**

நம்முடைய இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உங்களை வாழ்த்துகிறேன்.

500 வருடங்களுக்கு முன்பாக இலங்கை மக்களாகிய நம்முடைய முன்னோர்கள் புத்த மதத்தைச் சார்ந்தவர்களாகவும், இந்துக்களாகவும், அந்நிய தேவர்களுக்கு சடங்குகள் செய்தும் இருளில் வாழ்ந்து வந்தனர். 1505 ல் போர்ச்சுகீசியர்களாலும், 17ம் நூற்றாண்டில் டச் மக்களாலும், 18ம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களாலும் கிறிஸ்தவ மதம் இலங்கைக்கு வந்தது. இந்த அந்நியர்கள் தங்களுக்கு இருந்த அரசியல் அதிகாரத்தைக் கொண்டு கிறிஸ்தவ மதத்தை பரப்பினர். அநேக மக்கள் அதிகாரத்திற்கு பயந்தும், பொருளாதார சலுகை களுக்காகவும் , படிப்பு வசதி சலுகைகளுக்காகவும் கிறிஸ்தவ மதத்திற்கு மாறினர்.

இன்றைய காலங்களில் குறிப்பாக, ரோமன் கத்தோலிக்க சபைகளுக்கும் , ஸ்தாபனம் நிறுவிய சபைகளுக்கும் போகிற கிறிஸ்தவர்கள் தாங்கள் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தததாக உரிமைப் பாராட்டுகின்றனர். ஆனால் தேவனுடைய கிருபையினாலும், அவருடைய வார்த்தையின் வல்லமையினாலும் அநேக இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் மேற்சொன்ன சபைகளிலும் காணப்படுகின்றனர்.

1812ம் ஆண்டில் வந்த மிஷனெரிகள் மூலமாக சபைக்கு செல்லும் மக்களிடையேயும், உள்ளூர் மக்களிடையேயும் ஒரு பெரிய மாற்றம் 18ம் நூற்றாண்டில் காணப்பட்டது. இலங்கையில் அப்பொழுது தான் மிஷனெரி இயக்கம் பிறந்தது. இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, பரலோகத்தின் சந்தோஷத்தைப் பெற்றுக் கொண்ட தேவனுடைய பிள்ளைகளில் சிலர் தங்களுடைய அனுபவத்தை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்பினர். அவர்களுடைய விருப்பமும், தாகமும் அவர்களை இலங்கை நாட்டு கடற்கரைக்கு 1812ம் ஆண்டு கொண்டு வந்தது. அந்த மிஷனெரிகளுக்குள் சிறப்பு வாய்ந்த சிலரைக் குறிப்பிட விரும்புகிறேன். J.D.Palm. James Chater, Samuel Mills, Samuel Newell, Harriet, Daniel Poor, Susan, Miron Winslow, Elize Agnew, John Scudder, Samuel Fisk Green.Evlyn Karney, Muriel Hutchins, Elezebeth, and Thomas Coke sent by SPG, ZMS, LMS, BMS, CMS, MMS , மற்ற மிஷனெரி இயக்கங்கள்.

இலங்கை கடற்கரைக்கு வந்த இந்த மிஷனெரிகள் இயேசுவின் அன்பு தங்கள் வாழ்வை எவ்வாறாக மாற்றியது என்பதை சாட்சியாக சொன்னதின் நிமித்தமாக அநேக புறமத நண்பர்களும், சபைக்கு செல்பவர்களும் இரட்சிக்கப்பட்டார்கள்.

இந்த மிஷனெரிமார்கள் தங்களுடைய எல்லா சொகுசுகளையும் துறந்து, இயேசுவின் அன்பைக் குறித்து முழு அர்ப்பணிப்போடு பகிர்ந்து கொண்டனர். அவர்கள் மெழுகுவர்த்தியைப் போல எரிந்து மற்றவர்களுக்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தனர். இந்தப் புதிய அனுபவத்தின் மூலமாக அநேக ஆயிரம் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் இலங்கை சபைகளிலே காணப்படுகின்றனர். முதலில் மக்கள் உலக வசதிகளுக்காக கிறிஸ்தவர்களாக மாறினர். ஆனால் மிஷனெரிகள் வந்த காலத்தில் தங்கள் உலக ஆசைகளை துறந்து, இயேசுவை ஏற்றுக் கொண்டதின் மூலமாக மெய்யான சந்தோஷத்தை அனுபவித்தார்கள். இந்த அன்பான மிஷனெரிகளின் ஊழியங்களினால் தான் நாம் இன்றைக்கு தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்பதை நாம் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

தேவனுடைய சித்தத்தின்படி அவருடைய பிள்ளைகளாக நாம் மாற்றப்பட்டிருக்கிறோம். இதில் நம்முடைய பொறுப்பு என்ன ? அதற்கான விடை 1பேதுரு 2 : 9 "நீங்களோ, உங்களை அந்தகாரத்தி னின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு, தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாகவும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாகவும், பரிசுத்த ஜாதியாயும், அவருடைய சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். "

அப்படியானால் நாம் சுவிசேஷம் என்னும் எரிகிற விளக்கை நம்முடைய கைகளில் ஏந்தி, இலங்கையிலுள்ள கிராமங்களிலும், மலைப் பகுதிகளிலும், பட்டணங்களிலும் கொண்டு சென்று அநேகர் இந்த ஒளிக்குள் பிரவேசிக்க நாம் பிரயாசப்பட வேண்டும். நம்முடைய நாட்டில் ஒரு வீட்டு சபைக்கூட இல்லாத 32000 கிராமங்கள் உள்ளன. பவுல் கொலோசெயருக்கு சொல்கிறதை நினைவுகூருங்கள்.

கொலோ. 4 : 3 – 5 **"கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக் குறித்துப் பேச வேண்டிய பிரகாரமாய் பேசி, அதை வெளிப்படுத்துவதற்கு, திருவசனம் செல்லும்படியான வாசலை தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள் . . . காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் "**

மிஷனெரி இயக்கத்தின் இருநூறாவது நிறைவு ஆண்டை ( 1812 – 2012 ) அடுத்த வருடம் மே மாதத்தில் கொண்டாட இருக்கும் நாம் அதன் ஆயத்தமாக பின்வரும் காரியங்களுக்கு நம்மை ஒப்புக் கொடுப்போம்.

ஒரு நாளில் ஒருவருக்காவது சுவிசேஷத்தைக் கூற வேண்டும்

- ➢ 100 கிராம ஊழியத்தில் ஈடுபாடு கொள்ள வேண்டும்
- ➢ மிஷனெரி ஜெபக்குழு ஒன்றில் சேரவோ (அ) ஆரம்பிக்கவோ வேண்டும்
- ➢ உங்கள் சபையில் மிஷனெரிக் குழுவை துவங்க வேண்டும்
- ➢ மிஷனெரிகளுடைய சுயசரித்திரத்தை படித்து மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும்
- ➢ உங்கள் நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள மிஷனெரி ஸ்தாபனங்களோடு உங்களை இணைத்து கொள்ள வேண்டும்
- ➢ மிஷனெரிப் பணிக்காக நீங்கள் கொடுக்க வேண்டும்

**Bro. P.T. Christopher** SLVGM (Founder/Patron) 0091 94435 44628

**Email :** jesus100villages@yahoo.com **Web :** www.tvgm.org

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## துதி,கனம், மகிமை – இயேசுகிறிஸ்துவுக்கே!

**பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.**

### விசுவாசிகள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

**சகோதரி மல்லிகா, நெல்லை.**

என் மூத்த மகனின் திருமண காரியத்தில் காணப்பட்ட தடைகள் மாற ஜெபிக்கும்படி தங்களுக்கு கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு மகனின் திருமணம் சிறப்பாக நடைபெற உதவி செய்தார்.

**சகோ. சுனில், கன்னியாகுமரி.**

நான் M.Com. தேர்வு நல்ல முறையில் எழுதி, அதிக மதிப்பெண்கள் எடுக்க ஜெபிக்கும்படி கேட்டிருந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். கர்த்தர் ஒவ்வொரு பாடத்திலும் 70% மதிப்பெண் எடுத்து வெற்றி பெற உதவி செய்தார்.

**சகோதரி சகாயவின்ஸி, க. குமரி.**

எனக்கு சொந்தவீடு கிடைக்க ஜெபிக்க கேட்டிருந்தேன். நீங்களும் ஜெபித்து பதில் எழுதியிருந்தீர்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு சொந்த வீடு கட்ட உதவி செய்தார். மேலும் என் கணவருக்கு சொந்தமாக இரண்டு சக்கர வாகனம் வாங்கவும் கிருபை செய்தார்.

**பாஸ்டர் பெனியேல், பாளை.**

என் மகள் பாலின் எபனேசருக்கு தேவன் சுகமான பிரசவத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை.

**சகோ. ஆபிரகாம், விழுப்புரம்.**

என் மகன் 10ம் வகுப்பில் தேர்ச்சி பெற ஜெபிக்கக் கேட்டிருந்தேன். தேர்வு முடிவு வந்தபோது அவன் பாஸான செய்தி கேட்டு மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

**சகோ. ராமசந்திரன், கேரளா**

எழுத்துத் தேர்விற்காக ஜெபிக்கக் கேட்டிருந்தேன். நீங்கள் ஜெபித்தீர்கள். இரண்டாம் நபராக Select ஆகிவிட்டேன்.

### புறமத நண்பர்கள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

**சகோதரி பாப்பா, சிவகங்கை.**

என் சகோதரிக்கு ஆண்குழந்தை வேண்டுமென ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு ஆண்குழந்தையை கொடுத்தார்.

**சகோ.கற்பககுமரன், தி.மலை.**

நான் 2011 ஜூலை மாதம் பத்திரிகை வாக்குத்தத்தத்தை மிகவும் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தேன். "**உன் கட்டுகளை அறுப்பேன்**" என்று வாக்குத்தத்தம் இருந்தது. வாக்குத்தத்த செய்தியை வாசிக்கும் போதே கதறி அழுது விட்டேன். எல்லா வார்த்தைகளும் என் குடும்ப பிரச்சனைக்காகவே எழுதியுள்ளது போல் இருந்தது.

**சகோதரி நிர்மலா, திருச்சி.**

என்னுடைய சுகபிரசவத்திற்காகவும், அண்ணனுடைய திருமணத்திற்காகவும் ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். எனக்கு சுகபிரசவத்தில் பெண் குழந்தை பிறந்துள்ளது. அண்ணனின் திருமணம் சிறப்பாக முடிந்தது.

**சகோதரி லட்சுமி பாபு , வேலூர்.**

என் அக்கா மகளின் திருமணம் நடந்தால் சாட்சி எழுதுவதாக கடிதம் எழுதியிருந்தேன். ஜூன் 5ம் தேதி திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

**சகோ.சேகர், வேலூர்.**

நான் M.Phil தேர்வில் வெற்றி பெற கர்த்தர் கிருபை செய்தார்.

**சகோ.கணேசன், நெல்லை.**

சுடலி 10ம் வகுப்பு தேர்விற்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். 448 மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற கர்த்தர் உதவி செய்தார்.

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபிப்பீர்களா?**

**"நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது". தானி. 9:23**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

*இதை வாசித்து ஜெபிக்கிற தேவ பிள்ளைகள் உங்கள் முழு முகவரி, ஈமெயில், தொலைபேசி எண் யாவையும் எங்களுக்கு தெரியப்படுத்தி உதவுங்கள். உங்களுக்காக TVGMகுழுவினர் ஜெபிக்க வாஞ்சிக்கிறார்கள்*

**திங்கள்:** கர்த்தருடைய கிருபையால் **பாஸ்டர் விக்கி** அவர்கள் TVGM சிறுவர் இல்லத்திற்கு ஒரு டெம்போ டிராவல் ஏலீம் சபை மூலம் வாங்கிக் கொடுக்க முன்வந்துள்ளார்கள். தேவாதி தேவனைத் துதியுங்கள். குறைவுபடுகிற ரூ. 2 லட்சத்தை கர்த்தர் தமக்குச் சித்தமானவர்கள் மூலம் சந்திக்க ஜெபியுங்கள்.

**செவ்வாய்:** 100கிராம ஊழியத்தின் மூலம் வீடுவீடாக இலவசமாக விநியோகிக்க சென்னை IBL நிறுவனத்தார் 2,63,500 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள் மிகவும் சலுகையான விலையில் TVGMக்கு அனுப்பி வைத்துள்ளார்கள். நாம் செலுத்த வேண்டிய ரூ. 2,63,500 ல் இன்றுவரை ரூ. 43,500 ஐ செலுத்த கர்த்தர் கிருபை செய்தார். தேவனைத் துதியுங்கள். இன்னும் செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ. 2,20,000 அற்புதமாக சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

**புதன் :** TVGM மூலம் ஜெபவீடு கட்டுவதற்கும், குறைவேலைகளை முடிப்பதற்கும் நிலம் வாங்கித் தரும்படியாகவும் உத்தேசமாக 130 கிராம ஊழியங்கள் விண்ணப்பித்துள்ளார்கள். இன்னும் விண்ணப்பங்கள் வந்து கொண்டேயிருக்கிறது. கர்த்தர் பொருளாதார வாசலை திறக்க ஜெபியுங்கள்.

**வியாழன் :** TASOL தரிசனம் படிப்படியாக வளர்ந்து வருவதற்காக தேவனைத் துதியுங்கள். ஆனாலும் நிலம் வாங்குவதற்கு நாம் முன் பணமாக செலுத்திய பல லட்சங்கள் இன்னும் சரி செய்ய முடியாமல் இருக்கிறது. கர்த்தர் தாமே உயர்கல்வி தரிசனத்தைப் பெற்ற கர்த்தருடைய பிள்ளைகளை நம்மோடு இணைக்கும் படியாக ஜெபியுங்கள்.

**வெள்ளி :** TVGM ஏலீம் சிறுவர் இல்லத்தில் பாத்ரூம், டாய்லெட் வேலைகள் இன்னும் முடிவடையாததால் பிள்ளைகள் உபயோகிக்க முடியவில்லை. ஜெபியுங்கள்.

**சனி :** 100கிராம ஊழியத்திற்கு தன்னார்வத் தொண்டர்கள், தலைவர்கள் எழும்ப ஜெபியுங்கள்.

**ஞாயிறு :** ஜெபிக்கிற, கொடுக்கிற, உழைக்கிற ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி. 9 : 7

**காணிக்கை அனுப்பவும் மற்றும் சகல தொடர்புகளுக்கும் : -**


**TVGM தலைமை அலுவலக முகவரி**

BRO.STEPHEN CHRISTOPHER C.E.O.

**TAMIL VILLAGE GOSPEL MISSION**

1OO-VILLAGE,

SOMARASAMPETTAI ( Hospital Stop)

TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

Ph: 0- 431 - 2607241 Cell : 94449 80445

Email : 100village@tvgm.org Web : www.tvgm.org

Founder : Bro . P.T. Christopher - Cell : 94435 44628


**டிராப்ட் , செக்,** Bank to Bank **அனுப்ப வேண்டிய முறை**

Canara Bank , Code No: 1249, Puthur Branch, Trichy - 620 017

| நோக்கம் | காணிக்கை அனுப்ப வேண்டிய விபரம் |
|---|---|
| **100 கிராம ஊழியம்,** சுவிஷேப் புத்தகம், பின்தொடர்பணி, ஜெபவீடு கட்டுதல், முழுநேர ஊழியர். | **Tamil Village Gospel Mission**<br>SB. A/c :**12491010 - 23822** Indian Origin<br>SB. A/c : **12491010 -11947** Foreign National |
| **சிறுவர் இல்லம்:** பிள்ளைகள் பராமரிப்பு, தையற்மிஷின், **கட்டிட நிதி, மருத்துவ நிதி,** தொழுநோயாளர், விதவைகள், பார்வையற்றோர் , ஏழை, எளியவர் உதவி | **TVGM Social service** ( 80G வரி விலக்கு உண்டு)<br>SB. A/c : **12491010 - 23805** Indian Origin<br>SB. A/c : **12491010 - 24967** Foreign National |
| **TASOL நிலம்,** பிள்ளைகளின் **உயர் கல்வி நிதி** | **TASOL** ( 80G வரி விலக்கு உண்டு)<br>SB. A/c : **12491010 - 38110** Indian Origin only |

| ஸ்தாபனத்தின் பெயரில் அனுப்ப முடியாவிட்டால் | Stephen Christopher<br>SB. A/c : **12491010 - 18538** |
|---|---|

**குறிப்பு :** காணிக்கை அனுப்பும்போது நோக்கம், உங்கள் முழுமுகவரி, தொலைபேசி, ஈமெயில் யாவும் எங்களுக்கு தெரியப்படுத்தி உதவுங்கள்.


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011

HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011

Posting Date 25th at H.P.O. Trichy.

**சோமரசம்பேட்டை – சகோ. ஸ்டேன்லி , சகோதரி ஷீலா**வின் பெற்றோர் **திரு. ஹீபர் தர்மக்கண் திருமதி சந்திரா ஹீபர்** அவர்கள் இருவரின் மரண நினைவுநாளில் **சகோ. P.T.கிறிஸ்டோபர்** தேவசெய்தியளித்தார்கள்.










சகோ. ஸ்டேன்லி சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு விருந்தளித்தார்கள்.

To

**Return Requested:** TVGM ,
100 - Village,
Somarasampettai, Trichy - 620 102. India.